RECEIVED 1989-6-19 Periodical Division Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 3 | துல்ஹஜ்தா 12 | இதழ் 3(
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 17-06-1989

## 'ஈரோஸ்' உறுப்பினர் கொலைக்கு ரெலோ கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் 'ஈரோஸ்' உறுப்பினர்களின் படுகொலைக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்க யாழ். மாவட்ட பொறுப்பாளர் வை. கி. செந்தோழன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''வவுனியாவில் இடம்

(2-ம் பக்கம் பார்க்க)

## "அந்த ஆறுபேரும் முகாமுக்கு சென்றவர்களே"

### சென்னையில் 'ஈரோஸ்' அறிக்கை

[சென்னை]

''வவுனியாவிலுள்ள இராணுவ முகாம் ஒன்றுக்குச் சென்ற தமது உறுப்பினர்கள் ஆறு பேரும், சடலங்களாக அந்த முகாமிற்கு அருகில் மீட்கப்பட்டனர்'' என்று 'ஈரோஸ்' இயக்கம் சென்னையில் நேற்று வெளியிட்டுள்ள

(2-ம் பக்கம் பார்க்க)

# இந்தியப்படை வெளியேற்றம்: வேறு பேச்சுக்கே இடமில்லை!

## 'பிரேமா' விசேட செய்தி

(கொழும்பு)

**"இலங்கையில் நிலைகொண்டிருக்கும் இந்திய அமைதிப்படை திருப்பி அழைக்கப்படவே வேண்டும். இதுபற்றி வேறு பேச்சுக்கே இடமில்லை." என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த விசேட செய்தியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

''அமைதிப் படையை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்யப்பட்டுவருகிறது. அதற்குத் தடையேற்படும் விதத்தில் எந்தச் செயல்களிலும் இறங்க வேண்டாம். உள்நாட்டில் நமக்கிடையே உள்ள கருத்து

(7-ம் பக்கம் பார்க்க)

## இ. காங்கிரஸ் மாநாடு; அ. தி. மு. க. பகிஷ்கரிப்பு

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்ளும் விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த அனைத்துக்கட்சி மாநாட்டில் அ. தி. மு. க. கலந்து கொள்ளவில்லை.

அமைதிப்படையை விலக்கிக் கொள்ளுமாறு இலங்கை அரசு விடுத்திருக்கும் கோரிக்கைக்கு எதிராக தமிழ்நாட்டு

(2-ம் பக்கம் பார்க்க)

## இந்திய நிலைப்பாடு விரைவில் பிரேமாவுக்கு அறிவிக்கப்படும்

### கல்கத்தாவில் ராஜீவ்

(கல்கத்தா)

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்வது தொடர்பான இந்தியாவின் நிலையை விளக்கி இலங்கை ஜனாதிபதிக்கு விரைவில் கடிதம் ஒன்றை அனுப்ப இருப்பதாக பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்

(8-ம் பக்கம் பார்க்க)

## சன்சோனி காலமானார்

[கொழும்பு]

முன்னாள் பிரதம நீதியரசர் திரு. சன்சோனி, தமது 76வது வயதில் காலமானார்.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டின்போது இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களை விசாரிப்பதற்காக

(8-ம் பக்கம் பார்க்க]

## எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தில் வெடிகுண்டு பார்சல்!

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலைய எல்லையில் வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு பார்சல் ஒன்றை உரிய நேரத்தில் இராணுவத்தினர் அகற்றி, பெரும் விபத்தை தவிர்த்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தினுள் எல்லைப்புற வேலியை வெட்டி உள்ளே செல்ல முயன்ற ஆயுதம் தாங்கிய சுமார் 20 பேர், அப்பகுதியால் ரோந்து சுற்றிய இராணுவத்திரைக்கண்டு தலைமறைவாகி விட்டனராம். அவ்விடம் வந்த இராணுவத்தினர் தேடுதல் நடத்தியபோதே மேற்படி நிலையத்தின் எல்லையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுப் 'பார்சலை' கண்டுபிடித்து அதைச் செயலிழக்கச் செய்தனர் என்றும் இதன் மூலம் பெரும் வெடி விபத்து தவிர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## "வட-கிழக்கில் தனித்துவமான முஸ்லிம் மாகாணசபை"

### முதலமைச்சர் தகவல்

[யாழ்ப்பாணம்]

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குள் முஸ்லிம்களுக்கெனத் தனித்துவமான முஸ்லிம் மாகாணசபை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக வடகிழக்கு முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

யாழ். பழைய நூலகக் கட்டிடத்தில் வர்த்தகர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் நேற்று நடத்திய சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

திரு. வரதராஜப்பெருமாள் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

''முஸ்லிம்களுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு முஸ்லிம்களின் பிரச்னைகள் தொடர்பாக விளக்கவிருக்கிறேன்.

''இதுதொடர்பான திட்டமொன்றைத் தயாரித்து வழங்குமாறு முஸ்லிம் சகோ

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ் வழமைபோல் ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

'யாழ் தேவி' ரயிலும், சரக்கு வண்டியும் கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

'யாழ் தேவி'யில் வழமைபோல் ஏராளமான பிரயாணிகள் வந்தனர். யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில்சேவை இன்று வழமைபோல் நடைபெறும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஐந்துசந்தி 'கிரனேட்' வீச்சு: ஈ.என்.டி.எல்.எவ். விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். ஐந்து சந்தியில் குளிர்பானக் கடையொன்றின்மீது 'கிரனேட்' வீசப்பட்ட சம்பவத்திற்கு ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என். டி. எல்.எவ்.) உரிமை கோரி விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட ஈ. என்.டி.எல்.எவ். வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

''பாமிஸ்' என்னும் முஸ்லிம் இயக்கத்தின் பத்திரிகையில் வெளியான செய்தியில், சம்மாந்துறையில் நடந்த இனமோதலுக்கும் எமக்கும் தொடர்புடையதாகவும், அதேநேரத்தில் எம்மால் செய்யப்படாததை எழுதித் தமிழ் பேசும் மக்களிடையே வதந்தி பரப்பியதற்காகவும் மேற்படி பத்திரிகைக்கும் ஐந்து சந்தியில் உள்ள குளிர்பானக் கடை உரிமையாளருக்கும் தொடர்புடைய காரணத்தினால்

(2ம் பக்கம் பார்க்க)

## பாஸ் வழங்கும் நாட்கள்

[யாழ்ப்பாணம்]

இரண்டு சக்கர வாகனங்களுக்கு அடுத்த வாரம் முதல். வாரத்தில் மூன்று நாட்களில் மட்டுமே அனுமதிப் பத்திரம் ('பாஸ்') வழங்கப்படும் என்று இந்திய அமைதிப்படை நகர கமாண்டன்ற் செய்திக் குறிப்

(2-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொண்டர்படை வீரர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் பிரஜைகள் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தாண்டிக்குளம் என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

23 வயதான ஜீவன் என்ற பிரஜைகள் தொண்டர் படை

(8ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து யாழ். வந்த இலங்கை ராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் முகாமிட்டிருக்கும் ராணுவத்தினர் இரண்டு கவசவண்டிகள் உட்பட ஆறு வாகனங்கள் சகிதம் நேற்றுக் காலை யாழ. சோட்டைக்குச் சென்றதைக் காணமுடிந்தது.

கொழும்பிலிருந்து ரயில மூலம் இலங்கை ராணுவந்

[2ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கருவாடு, ஆட்டுத்தோல், மற்றும் மாட்டுத்தோலுக்கு உகந்த அரைத்த உப்புத்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. & Stores, 777, K. K. S. Rd, Jaffna.
சி-2925

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை (Country of Origin Holland) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கிளை; மல்லிகா ஸ்டோர், மாங்குளம்.
சி-2947

Broiler எல்லாவகையான இறைச்சிக் கோழிகளும் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
[சி-2797]

### நாவல்கள்

செங்கை ஆழியானின் நாவல்கள் மண்ணின் தாகம், தீம் தரிகிட தித்தோம், ஓ அந்த அழகிய பழைய உலகம், அக்கினிக் குஞ்சு, ஆச்சி பயணம் போகிறாள், கடல் கோட்டை, விற்பனையாகின்றன. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கமலம் பதிப்பகம், 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2932)

### தேவை

குரோசறி பொருட்கள் வியாபாரத்தில் அனுபவம் உடைய இருவர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்: சரிதா ஜுவல்லர்ஸ், இலக்கம் 7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சி-2967

தொண்டு மனப்பான்மையுடைய நிரந்தரமாக இருந்து பணியாற்றக்கூடிய இரு உதவி மேற்பார்வையாளர்கள் தேவை. 19-6-89 காலை 9-00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். உணவு, உடை தங்குமிடம் வழங்கப்படும். நிர்வாகச்செயலாளர், சைவச் சிறுவர் இல்லம், கைதடி.
சி-2957

## லண்டன் றன்பேர்லி நூலகம் வடகிழக்கு பாடசாலைகளுக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கென லண்டனிலிருந்து அனுப்பப்பட்டுள்ள 2, 200 புத்தகங்கள் வந்து சேர்ந்ததும், கிளிநொச்சி, மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என மல்லாகம் கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள றன் பேர்லி நூலகம் ஏற்கனவே மூவாயிரம் புத்தகங்களை அனுப்பியிருந்ததாகவும், இப்புத்தகங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலை மாவட்டங்களிலுள்ள பெரிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர்தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வண்ணைவைத்தீஸ்வரா வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் கல்லூரி, மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் செம்மலை மகாவித்தியாலயம், முள்ளியவளை விஜயானந்தக் கல்லூரி, பாண்டியன்குளம் அ. த. க. பாடசாலை, யோகபுரம்-மல்லாவி மகாவித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியலயம் ஆகியவற்றிற்கு இப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான புத்தகங்கள் திருமலைமாவட்ட இந்து இளைஞர் பேரவையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

### கல்வி

S. K. ஜீவமோகனின் O/L கணித வகுப்புக்கள் அதிசித்தி பெற தொடர்புகொள்க: ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, கல்வியங்காடு. [தனிப்பட்ட முறையிலும் கல்வி பெறலாம்]
[சி-2794]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

Examination for the Certificate Course in Basic Language & Data Processing (1988 Batch I Repeat Candidates) Diploma in Computing Course (Repeats)

மேற்படி பரீட்சைகள் 8-7-89ல் ஆரம்பமாகும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கத்தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதில் பதிவாளர்**

(சி-288)

## நல்லூர் நூலகம் இவ்வாரம் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் நல்லூர்க்கிளை நூலகம் புத்தகக் கணக்கெடுப்புக்காக இன்று 1ம் திகதி தொடக்கம் ஒரு வாரகாலத்துக்கு மூடப்பட்டிருக்கும் என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு. பி. பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

நூலகம் மூடப்பட்டிருப்பதனையிட்டு வாசகர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக ஆணையாளர் கவலை தெரிவித்தார். (ஆ)

## இந்துவும் வேம்படியும் தேசியகல்லூரிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்லூரிகளாகக் கணிக்கப்பட்டுள்ள யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியும், யாழ் இந்துக் கல்லூரியும் யாழ். கல்வித் திணைக்கள மேற்பார்வையிலும், யாழ். கோட்டக் கல்வி அலுவலக அமைப்புக்குள்ளும் அடங்கியனவாக செயல்படும் என யாழ். கல்வித் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

## கிராமசேவையாளர் பிரிவுகள் அதிகரிப்பு

(அச்சுவேலி)

வலி கிழக்கு (கோப்பாய்) உதவி அரசாங்க அதிபர் பிரிவு 32 கிராம சேவையாளர் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முன்னர் 17 கிராம சேவையாளர் பகுதிகளாகச் செயற்பட்டு வந்தது. இந்த 17 பிரிவுகளும் தற்பொழுது 32 பிரிவுகளாக்கப்பட்டுள்ளன.

15 புதிய கிராம சேவையாளர் பகுதிக்கும் பயிற்சி பெற்று வரும் 15 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 25-ம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.எஸ். சிவமகாராசா உட்பட கூட்டுறவு அதிகாரிகள் இதில் கலந்து கொள்வார்கள்.

இக்கூட்டத்தில் சமாச நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படுவார்கள்.

## யாழ். ஐந்து சந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பற்றித் தீர விசாரணை செய்யக் கடை உரிமையாளருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். வராதபட்சத்தில் எம்மால் கடுமையான அறிவித்தலும் கொடுத்தோம். அதையும் பொருட்படுத்தாததால் மேற்படி கடைக்கு கடந்த 14ம் திகதி இரவு 7-00 மணிக்கு நாம் 'கிரனைட்' வீசப்பட்டது.

''இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடும் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும், அவர்கள்மீது ஈ. என். டி. எல். எவ். கடும் நடவடிக்கை எடுக்க ஒருபோதும் தயங்காது என்பதைத் தெரிவிக்கின்றோம்.

''நாம் மக்கள்மீதுகொண்ட அன்பினாலும், மக்கள் எம்மீது கொண்ட அன்பினாலும் வளர்ந்துவரும் இவ்வேளையில் இதைச் சகித்துக்கொள்ளமுடியாத சில எதிர்ப்புச்சக்திகளின் அபாண்டப் பழியே இப்பத்திரிகைச் செய்தியாகும். நாம் எந்தச் சமூகத்தினருக்கும் எதிரானவர்கள் அல்லர். அதே நேரத்தில் எம் தமிழ் பேசும் மக்களை அடக்கும் சதிகாரர்களை அடக்கி ஜனநாயக வழிக்குத் திருப்புவதே எமது போராட்டமாகும். ஆகவே மக்களே பீதி அடையாதீர்கள்.

''மேற்குறிப்பிட்ட கடை உரிமையாளர் எம்மால் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டுள்ளார் என்பதையும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு வதந்திகள் பரப்புபவர்களை இனங்கண்டு அறிவிக்குமாறு கேட்கின்றோம்.''

## அந்த ஆறுபேரும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் உள்ள இந்த முகாமுக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்த 'ஈரோஸ்' உறுப்பினர் செல்வகுமார் பற்றி அறிந்து வருவதற்காகவே இந்த ஆறு பேரும் முகாமுக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களில் ஒருவர் வனனிப் பகுதிச் செயலாளர் தனபால் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

## இந்திரா காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையே ஆதரவை ஏற்படுத்தும் முயற்சி குறித்து ஆராய்வதற்காக இந்த மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்திரா காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்துள்ள அ. தி. மு. க. இந்த மாநாட்டுக்கு வரத்தவறியது காங்கிரஸ் வட்டாரத்தில் வியப்பையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மாநாட்டுக்கு ஆளும்கட்சியான தி. மு. க. அழைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பலாலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லவே இவர்கள் யாழ். கோட்டைக்கு வந்து அங்கிருந்து யாழ். புகையிரத நிலையம் சென்று பொருட்களை ஏற்றிச் சென்றதாக அறியப்படுகிறது.

## பாஸ்வழங்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புக் கூறுகிறது.

வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் காலையில் எட்டு மணி முதல் பத்து மணிவரை மட்டுமே மேற்படி 'பாஸ்' வழங்கப்படும் என்றும் மேற்படி குறிப்புக் கூறுகிறது.

## ஈரோஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற 'ஈரோஸ்' உறுப்பினர்கள் ஆறு பேரின் படுகொலைகளை அறிந்து நாம் மிக அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். இப்பேர்ப்பட்ட கொலைகளினால் எமது இளைஞர் சமுதாயம் அழிவதையொட்டி நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

''நாட்டில் உள்ள மக்கள் யாவரும் அமைதிக்கும் சமாதானத்துக்கும் ஏங்கி, எதிர்பார்க்கும் இந்நேரத்தில் இக்கொலைகள் நடந்திருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும் இப்பேர்ப்பட்ட படுகொலைகள் நடந்திருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கொலைகளைப் புரிபவர்கள் யாராக இருப்பினும் உடன் நிறுத்துவது எமது தமிழ்ச் சமுதாயத்துக்கு செய்யும் பேருதவியாகும்.''


## ஓங்கார சக்தி தசாங்கம்

தெய்வீக நறுமணங்கமழும் வாசனைத் தூபப்பொடி

யான் பெங்களூரில் இருந்தபோது கடப்பைச் சித்தர் ஆஸ்ரமத்தில் வாசனைப் பொடி, சந்தனக் குச்சிகள் தயாரிப்பார்கள். அதை அடியேன் பயின்று வந்தேன். அதன்படி இந்த வாசனைத் தூபப்பொடியைத் தயாரித்துள்ளேன். இதன் உபயோகத்தால் சகல கிரக தோஷங்கள் எல்லாம் நீங்கப்பெற்று ஆதிபராசக்தியின் திருவருளும் கிடைக்கப் பெறுவீர்கள்.

தயாரிப்பாளர்:
சுவாமிஜி ஸ்ரீ சிதானந்தயோகி

கிடைக்கும் இடங்கள்:
சுந்தரம் பிறதர்ஸ், 173, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
ஆ. இராசையா அன் சன்ஸ், 69, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கடைகளிலும் கிடைக்கும்)
(சி-2963)


## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. வைரமுத்து இராசையா

[சிவா ஸ்ரோர்ஸ், யானை மார்க், பெப்சி குளிர்பான உரிமையாளர்]

அன்னையின் மடியில்: 22-12-24

ஆண்டவன் அடியில்: 14-06-81

வந்த பணி முடியும் முன்
விண்ணகம் மீண்டீரோ
நன்மை, தீமை எதுவென உண்மை புரியாது
நாம் இங்கு திண்டாடுகிறோம்
எம்மை கலங்கவிட்டு ஓர் நொடியில்
விண்ணுலகம் சென்றீரோ
விண்ணை முட்டும் கோபுரமும்
என்றோ ஓர் நாள் அழியும் ஆனால்
உண்மையான பாசம் என்றும் அழியாது
காலமலரில் வருட இதழொன்று
உதிர்ந்ததையா
ஆனால் கண்ணீர் பூக்களோ இன்றும்
சிந்துகின்ற கண்ணீர்.

உங்கள் பிரிவால் துயரத்தில் உழலும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2969)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

S. T. CHARI



தோற்றம்: 01-02-1923

மறைவு: 17-06-1987

தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

மானிப்பாய்.

(சி 2960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக ஆர்ப்பாட்டம்:

# சீனாவில் மாணவர் தலைவர் மூவருக்கு மரணதண்டனை

## உலக நாடுகள் பலத்த கண்டனம்

(பிக்கிங்)

**சீனாவில் மாணவர் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் தலைவர்கள் மூவருக்கு சீன உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. மேலும் பலருக்கு மரணதண்டனை வழங்கப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இம்முடிவு ஆர்ப்பாட்டக்காரர்களிடையே பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.**

ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் இந்த மூவரும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக ரயில் ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தியமைக்காகவே இவர்களுக்கு சீன உயர்நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது.

தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய மூன்று மாணவர்களுக்கும் மூன்று நாள் மாத்திரமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கெதிரான வழக்கு விசாரணையின் சில முக்கிய பகுதிகளைச் சீனத் தொலைக்காட்சி நிலையம் நேரடியாகவும் ஒளிபரப்பியது.

சீனாவின் சரித்திரத்தில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனைவழங்கப்படுவதுஇது தான் முதற்தடவையாகும். மேற்படி மூன்று மாணவர்களுக்கும் வழங்கப்பட்ட மரண தண்டனை சீனாவில் பெரும் உணர்ளலைகளைத் தோற்றியுள்ளது.

இதற்கிடையில் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஆதரவு வழங்கும்வகையில் ஹொங்ஹொங்கிலிருந்து பெருந்தொகையான பணத்துடன் சீனா வந்த அந்நாட்டு மாணவர் தலைவர்கள் ஐவரில் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் இவர்களுக்கு எதிரான விசாரணைகள் விரைவில் நடைபெறும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர் மூவருக்குச் சீன அரசு மரணதண்டனை வழங்கியதை அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் உட்படப் பல நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், தஞ்சம் கோரி வரும் மாணவர்களுக்குத் தமது நாடுகளில் நிரந்தப் புகலிடம் வழங்கவும் முடிவுசெய்துள்ளன.

# 'பெர்லின் சுவர் நிரந்தரமானதல்ல'

### - அதிபர் கொர்பச்சேவ்

(பொன்)

''பெர்லின் சுவர் நிரந்தரமானதல்ல, சமாதானம் தோன்றும் நேரத்தில் சுவர் தானாகவே சரியும்'' என்று சோவியத் அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

மே.ஜேர்மனியில் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சோவியத் அதிபர், இறுதிநாளில் தலைநகர் பொன்னில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: உலகில் அரசியல் நிலைமைகள் காலத்துக்குக்காலம் மாறுபடும். அது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தலாம். இவற்றைச்சமாளித்து எதிர்நீச்சல் போடுவதிலதான் மக்களின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

மே. ஜேர்மனையும் – கிழக்கு ஜேர்மனையும் பிரிக்கும் பெர்லின் சுவரும் நிரந்தரமானதல்ல. இரு நாடுகளுக்குமிடையில் சமாதானமான சுமுகஉறவுகள் தோன்றும் பட்சத்தில் சுவரும் தகர்க்கப்படுமென்றும் கூறினார்.

மே. ஜேர்மன் பயணம் மிகுந்தசந்தோஷத்தை தமக்கு ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் பாரியார் திறந்து வைத்தார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா நேற்றுமுன்தினம் கொழும்பு நவலோக ஆஸ்பத்திரியில் புதிய அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் திறந்துவைத்தார்.

# இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீதான தடை நீக்கப்படும்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் மீது கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைமேற்கொண்ட தடை நடவடிக்கை விரைவில் நீக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மே. இந்தியத் தீவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய அணியினர் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின்றி அமெரிக்காவிலும், கனடாவிலும் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டதையடுத்து இவர்கள்மீது கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை கடும் நடவடிக்கை மேற்கொண்டது.

இதன்மூலம் அடுத்த ஒரு வருடங்களிற்கு சர்வதேச, டெஸ்ட் போட்டி எதிலும் இவர் கலந்து கொள்ள தடையும் ஒவ்வொருவர்மீதும் குற்றப்பணமாக தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் இதைச் சபை ஊர்ஜிதம் செய்யவில்லை.

தற்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையடுத்து இந்த வீரர்கள்மீது குறைந்த குற்றப்பணத்தை மாத்திரம் அறவிட முடிவுசெய்யப்பட்டுள்ளதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பொலிஸ் அததியட்சகர்கள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோரின் சகல இடமாற்றங்களையும் அரசாங்கம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்துள்ளது.

நாட்டின் தற்போதைய பாதுகாப்புநிலைமைகள்காரணமாகவே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்களை கடந்த 10-ம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## 'சகல கூட்டுறவுச் சங்கங்களும் தேசிய கூட்டுறவுச் சபையில் இடம்பெறவேண்டும்'

(மாவிட்டபுரம்)

யாழ், மாவட்டத்தி லுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களையும் யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவுச்சபையில் அங்கத்துவம் பெறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவுச்சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணிம், யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஐ. நித்தியராஜ் ஆகியோர் விடுத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேசிய கூட்டுறவுச் சபையின் கிளையாக செயல்பட்டு வந்த யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவுச்சபை தனியான ஓர் அமைப்பாக மாற— ''யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை'' என்று பதிவு பெற்றுள்ளது.

எனவே எமது மாவட்டத்தின் விடயங்களை நாமே திட்டமிட்டு செயற்படுத்தி கூட்டுறவு இயக்கத்தை சிறப்பாக வழிநடத்த யாழ். மாவட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை உறுப்பினர் இருவர் உட்பட எண்மர் கொலை

(கொழும்பு)

தென்பகுதியில் இடம்பெற்ற வெவ்வேறு வன்முறைச் சம்பவங்களில் மாகாண சபை உறுப்பினர் இருவர் உட்பட எண்மர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் பலவும் அபகரிக்கப்பட்டுள்ளன.

சப்பிரகமுவ மாகாணசபை ஐக்கிய சோஸலிச கட்சி உறுப்பினர் திரு. லெஸ்லி ஜெற்ரன் வெலவும், வடமத்தியமாகாண ஐ. தே. கட்சி உறுப்பினர் ஜனாப் ஜலால்டீன் நஸாரும் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களது மெய்ப்பாதுகாப்பாளர்கள் நால்வரும் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கொட்டாஞ்சேனை, அநுராதபுரம், யக்கல பகுதிகளில் இ. போ. ச.ஊழியர் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தென்பகுதிக் கொலைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

கடந்த மாகாணசபை, பொதுத்தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர் இருவர் உட்படதென்பகுதியில் பலர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. டபிள்யூ. கே. விஜயதாஸாவும், களுத்துறைப் பகுதியில் திரு. கே.பி. வீரக்கொடியும் அவர்களது மெய்க்காப்பாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். தெனியாய பகுதியில் இ. போ. ச. நடத்துநர் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக தென்பகுதியில் குறைந்திருந்த கொலைச் சம்பவங்கள் தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தென்பகுதிச் சம்பவம்:

# பூமியதிர்ச்சியால் மண்சரிவு? ஆய்வுகள் நடக்கிறது

(கொழும்பு)

தென்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மண்சரிவுகள் 'பூமியதிர்ச்சி'யின் காரணமாக ஏற்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 2ம் திகதி இரவு 2 மணியளவில் சகல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதற்கு சில நிமிடங்களிற்கு முன்னர் வானிலும், பூமியிலும் வழமையற்ற சில சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி வானிலை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை இந்த மண்சரிவில் 300 பேர் வரை கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# உடுவில் உ. அ.! அ. பிரிவில் உணவுமுத்திரைவிநியோகம்ஆரம்பம்

[சுன்னாகம்]

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவு முத்திரை வைத்திருக்கும் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கும்பணி ஆரம்பமாகியுள்ளது. ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட உணவுமுத்திரைகள் அவ்வப்பகுதிகிராமசேவை அலுவலர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஏழாலையின் ஒரு பகுதி மக்களுக்கென வழங்கப்பட்ட ஏழாயிரம் உணவு முத்திரைகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன. ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான விநியோகப்பணிதொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பாவிப்பிலிருக்கும் உணவு முத்திரையின் அளவிலேயே புதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டதால் உணவு முத்திரைகோரி புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு உணவு உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை.

## வருடாந்த உற்சவம்

(வடமராட்சி)

புற்றளை சித்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை 18-ம் திகதியும் தீர்த்தோற்சவம் 19–ம் திகதியும் பூங்காவனம் 20–ம் திகதியும் நடைபெறவுள்ளது.

# ஆயுள்வேத நிலையங்களிலும் மருந்திற்குத் தட்டுப்பாடு

(சுன்னாகம்)

ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. பொதுவாககாய்ச்சல் இருமல் போன்ற நோய்களுக்கு உபயோகப்படுத்தும் மருந்துவகைகள் போதுமானதாக வழங்கப்படுவதில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

பற்றுக்குறைவான மருந்து வகைகளை விலைகொடுத்து வாங்கக்கூடிய ஒழுங்குகள் நடைமுறையிலிருந்த போதிலும், இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் மருந்து வகைகளை வாங்கி வழங்குவதில் தயக்கம் காட்டு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தொண்டுசெய்யும் பேறு அவ்வளவு எளிதில் பெறக்கூடியதன்று. முதலில் விருப்பம்வேண்டும். பின்னர் அனுபவம் வேண்டும்.

— மகாத்மாகாந்தி.

## நமது நோக்கு

# படகுக்கதை தொடர்கிறது!

வியட்நாம் இரண்டு பட்டபோது வடவியட்நாம் கம்யூனிஸ்ட் ஆட்சிக்குள் வந்தது. தென் வியட்நாம் அமெரிக்காவின் செல்வாக்குக்குள் வந்தது. நீண்ட போருக்குப்பின் அமெரிக்கா வெளியேறியதும், வியட்நாமின் இரு பகுதிகளும் இணைந்ததும்பழையசங்கதி! ஆனல், இணைப்பிற்குப் பின் அந்த நாட்டைவிட்டுப் பலர் அகதிகளாக வெளியேறத் தொடங்கினர்கள். இந்த வெளியேற்றம், வானொலி, செய்தியேடுகள், ட. வி. போன்ற தொடர்புச் சாதனங்களுக்கு நல்ல 'தீனி' யாக அமைந்தது.

வள்ளங்களிற் குடியேறி, நாடுநாடாக அலைந்து, இறங்கவிடாமல் தடுக்கப்பட்டு, வேறு நாடுகளுக்குத் திசை திருப்பப்பட்டு அல்லற்பட்ட கண்ணீர்க் கதை சர்வதேசச் செய்தியாளர்களின் மெருகூட்டலால், நல்ல கதையாக அமைந்தது. இந்தக் கதையின் கதாநாயகர்களுக்கு இடப்பட்ட 'வியட்நாமியப் படகு மக்கள்' என்ற பெயரும் பிரபலமாயிற்று.

வேறு பல நாடுகளின் அரசியற் குழப்பங்களும், வல்லரசுகளின் அணுவாயுதப் பேச்சரங்குகளும், நட்பு முறிந்த கதைகளும், நாடுகளுக்கிடையே அரும்பிய காதற் கதைகளும் மக்கள் கவனத்தைக் கவர்ந்தன. இந்தப் படகு மக்களின் செய்திகள் உலக மக்களின் கண்களுக்குத் தெரியாத காரணத்தால் இந்தப் பிரச்சினை 'மூடப்பட்ட பைல்' என்றுதான் பலரும் நம்பினர். ஆனல் மீண்டும் தலைதூக்கியிருக்கிறது இந்தச் சிக்கல். முன்புவெளியேறிய அகதிகளில் இருநூறு பேர் மட்டில் வியட்நாமிற்குத் திரும்பியுள்ளார்கள் இவ்வாண்டில், ஆனல் இவ்வாண்டு முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் 18,000 பேர் அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவந்திருக்கின்றது.

ஏற்கனவே வெளியேறிய எழுபதினயிரம் அகதிகள் தென்கிழக்காசிய நாடுகளில் கஷ்டமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமது நாட்டு மக்களுக்கே போதியளவு உணவு கல்வி சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளையே முறையாக அளிக்க முடியாது திணறும் இந்த ஆசிய நாடுகள் எவ்வாறுதான் அகதிகளைப் பராமரிக்கமுடியும்? தற்கால வசிப்பிடங்களில், மிக நெருக்கமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே, மிகவும் பாதிக்கப்பட்ட நாடு ஹொங்கொங். அங்கு சுமார் நாற்பதினயிரம் அகதிகள் தடுப்பு முகாம்களில் மிகக்குறைந்த வசதிகளோடு வாழ்ந்து வருகிறார்கள்.

ஆசியான் கூட்டமைப்பைச் சேர்ந்த ஆறு நாடுகள், சென்ற மார்ச் மாதத்திலிருந்து, இந்த வியட்நாமியப் படகு மக்களை அகதிகளாகக் கணிக்க மறுத்துவருகிறார்கள். வியட்நாமில் அரசியல் பழிவாங்கல் இல்லை, பொருளாதாரக் காரணங்களுக்காகவே இவர்கள் வெளியேறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமலில்லை!

இந்தவேளையில், ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் இப்படகு மக்களின் பிரச்சினை பற்றி ஆராய ஜெனிவாவில் மகாநாடொன்றை நடத்துகிறார் என்ற செய்தியும் வந்துள்ளது. இந்த அகதி மக்களை என்ன தூண்டல்களைச்செய்து தாயாகவே திரும்பிச்செல்ல வைக்கலாம் என்பது பற்றி ஆராய்கிறார்கள். தாமாகவே திரும்பிச்செல்ல மறுப்பவர்களை எவ்வாறு பலவந்தமாக அனுப்பலாம் என்பது பற்றியும் ஆய்வு நடக்கிறது. ஆனல், வியட்நாமோ சட்டவிரோதமாக வெளியேறினேர்; வெளியேறினேரே. மீண்டும் நாட்டுக்குள் வரவேற்கமுடியாது என்று கூறுகிறது, இது. ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகருக்குத தலையிடியை அதிகரித்துள்ளது.

அகதிகள் வருகையையும் கட்டுப்படுத்தவேண்டும்; அதேவேளை மனித உரிமை வழக்கங்களையும் கைவிட முடியாது. தருமசங்கடமான நிலையில் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டின் முடிவுகளை ஆவலோடு எதிர்பார்க்கிறேம், ஏனைய நாட்டு அதிகள் சிக்கலுக்குச் 'சிக்னலாக'!

# "ஆலய வழிபாடுதான் மனஅமைதியைத் தரும்"

(மாவிட்டபுரம்)

''எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறேம். மரணங்கள் சகஜமாகி அதிகரித்து வருகின்றன, ஆகவே நாம் வாழும் நாட்களையாவது தவப்பொழுதாகக் கழிக்க முயற்சிக்கவேண்டும். இறைவழிபாட்டில் ஈடுபட்டு இறைவனிடம் எம்மை அர்ப்பணிக்கவேண்டும்.''

இவ்வாறு காங்கேசன்துறை துர்க்கா பரமேஸ்வரி ஆலய 6ம் நாள் உற்சவத்தில்கலந்து சிறப்புரையாற்றிய பண்டிதர் மா. குமாரசாமி கூறினர்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை. முத்துக்குமாருக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வுற்சவத்தில் பண்டிதர் குமாரசாமி மேலும் பேசுகையில் கூறியதாவது: நாம் தினந்தோறும் எத்தனையோ கருமங்களைச் செய்துகொண்டிருக்கின்றேம். ஆனல் ஆலய வழிபாட்டுக்கு மட்டும் தவணை போட்டு வருகிறேம். இன்று போவோம் நாளை போவோம் என நாட்களைக் கடத்துகிறேம். இன்றுள்ள நிலையில் ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. ஆலய வழிபாடு எமக்கு மன அமைதியைத்தர வல்லது. ஆகவே ஆலய வழிபாட்டில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.''

நாளை ஞாயிற்றுக்கிழமை

# 70-ம் வருட தந்தையர் தினம்

## 'தந்தையைபோற்றுவோம்; துதிப்போம்; பேணுவோம்'

''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'', ''அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்'', ''தந்தை தாய் பேண்'', ''தந்தையொடு கல்விபோம்!'', ''மாதா, பிதா குருதெய்வம்'' எனப் பல நீதிநூல் வாக்கியங்களை நாம் பலரும் படித்துள்ளோம். ஆனல் இக்காலத்தில் நாம் எமது பெற்றேரை மதித்துக் கீழ்ப்படிந்து அவர்கள் புத்திமதிகளைக் கேட்டு நடக்கிறேமா என்பதை இத்தினத்தில் நினைவுகூரவேண்டியதவசியமாகும்.

சாலமோன் ஞானி, நீதிமொழிகள் என்னும் இறைநூலில் ''என் மகனே! உன் தகப்பன் புத்தியைக்கேள், என் மகனே உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப் படுத்துகிறன்; ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதனையைக் கேட்கிறன்; மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறன்; மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவளுக்குச் கசப்புமானவன்; உன்னைப்பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு, உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணுதே; தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோகும்; பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம், பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே'' என்று பல அருமையான வேதவசனங்களை எழுதியிருப்பதையும் வாசித்தறிந்துள்ளோம்.

வருடாவருடம் எம் அருமைத் தாய்மார் தினத்தை மேமாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை நினைவு கூருவது போன்று, தந்தையர் தினமும் வருடா வருடம் ஜூன் மாதம் மூன்றும் ஞாயிற்றுக்கிழமை நினைவுகூரப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

தந்தையர் தினம் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்திற்கு வித்திட்டவர் ஓர் அமெரிக்கப்பெண் சுவிசேஷகர் திருமதி யோன் புறாஸ்டொட் என்பவராவார். இவர் தனது தந்தை உவில்லியம் ஸ்மாட் என்பவரின் ஞாபகமாக தொடங்கினர். தனது மனைவி இறந்தபின் உவில்லியம் ஸ்மாட் ஆறுபிள்ளைகளுக்கும், தாயும் தந்தையுமாக இருந்து வளர்த்தார். இந்த நன்றிக்கடனை மறவாத

(7-ம் பக்கம் பார்க்க)

டபிள்யூ. என். தேவகடாட்சம்
(அதிபர், நவாலி ஒய்வுநாள் பாடசாலை)

# நயினை அம்மன் உற்சவம் ஒரு கண்ணேட்டம்

(நமது வேலணை நிருபர்)

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ தினத்தையொட்டி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருந்தொகையான யாத்திரிகர்கள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கிறார்கள்.

இவர்களது போக்குவரத்து வசதிகருதி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து வடபிராந்திய போக்கு வரத்துச் சபையினர் விசேட பஸ்சேவைகளும் தனியார் போக்கு வரத்துச் சேவை பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து நயினுதீவு இறங்குதுறைவரைக்கும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரைக்கும் கட்டுப்பாடற்ற மோட்டார் படகுச்சேவை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. படகுகளில் குறிப்பிட்ட பிரயாணிகளே ஏற்றப்பட்டுவருகின்றனர். கூடுதலான பிரயாணிகளை ஏற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது, குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்தும் நயினுதீவு இறங்குதுறையில் இருந்தும் செல்பவர்கள் இலங்கை கடற்படையினரின் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே அப்பால் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

யாத்திரிகர்களினது சுகாதார வசதிகருதி ஆலயத்தின் அயலில் 30 தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பிரதேச சபை தொண்டர் சேவை, சென்ஜோன் அம்புலன்ஸ். முதலுதவிப்படை, வைத்தியசாலை, நீதிமன்றம், சுகாதாரப் பரிசோதகர் காரியாலயங்கள் என்பனவற்றிற்கான தற்காலிக கொட்டகைகள் ஆலய மேற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயஉற்சவங்களையொட்டி ஆலய வீதிகளில் அமைக்கப்படும் சிற்றுண்டிச்சாலைகள் அனைத்தும் சுகாதாரமுறைப்படி அமைக்கப்படவேண்டும் என்றும் இதற்கான அனுமதி பெற்றவர்களே வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆலய உற்சவ காலங்களைத் தொடர்ந்து நயினுதீவு கிராமத்திற்கான மின்சார விநியோகம் இரவு 10-00 மணியிலிருந்து இரவு 12 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் 16ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரைக்கும் இந்த மின்சார விநியோகம் இரவு பகல் முழுவதும் தொடர்ந்தும் விநியோகிக்கப்படவிருப்பதாக வேலணை மின் அத்தியட்சகர் தெரிவிக்கின்றார் வழக்கம்போல இவ்வருடமும் தொண்டர் சேவைகளும் இடம்பெற்றுவருகின்றது.

ஊர்காவற்றுறைக்கும் அனலைதீவுக்குமிடையேசேவையாற்றி வருகின்ற அலையரசி, குறிகாட்டுவான்நெடுந்தீவுக்குமிடையில் சேவையாற்றும் குமுதினிப் படகுச் சேவையும் அரச தேவையின் பொருட்டு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும். இந்த இரு படகுச்சேவைகளும் 18-ம் திகதி மட்டுமே விசேடமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும்.

ஆலய உற்சவம் ஆரம்பமான 5ம் திகதி முதல்

(7-ம் பக்கம் பார்க்க)

### சுத்த சித்திகள் யாவும் தருவாள்

ஆழக் கடல்மிசை எங்கும் அடியரை
ஆற்றி அவர்க்குறு துன்பம் அகற்றி
மீளம் பெறும்பல வரங்கள் கொடுத்து
மேன்மை யுறப்புகும் வழிகளும் காட்டி
சூழத் தரும்பெரும் துணைகளும் செய்து
சுத்த சித்திகள் யாவும் பெருக்கி
நாளைக் கவர்க்கொரு வாழ்வினைக் கொடுப்பாள்
நயினை நாக பூஷணி அம்மாள்.

— நாக. சண்முகநாதபிள்ளை.

(இன்று நயினை நாகபூஷணி அம்மாள் 13-ம் திருவிழா)

## பலதும் பத்தும்

### சூழல் மாசடைதல்

நேற்று இதே பத்தியின் முதற் கூற்றிலே சிறு தவறு நடந்துவிட்டது. 'பசுமை அமைதிச் சுற்றுடல் கழகம்' சூழல் மாசுபடுவதற்காக அமைக்கப்பட்டது என்ற தவருன கருத்து ஏற்பட்டுவிட்டது. மாசடைதலைத் தடுக்கும் பிரசாரத்தில் ஈடுபடுவதுதான் அந்தக்கழகம்!

நிற்க 15-6-89 இரவு சென்னை வானொலியில் பயனுள்ள கருத்தரங்கு ஒன்று ஒலிபரப்பப்பட்டது. சூழல் மாசடைதல் பற்றிய கருத் அங்கு எதிரொலித்தது. தமிழக முதல்வர் கலைஞர் அருமையான கருத்தொன்றினை முன்வைத்துள்ளார்.

தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஆனல் அத்தொழிற்சாலையின் கழிவுப் பொருள்களால் பலருக்குச் சுகாதாரக்கேடுகள்விளைவதைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. தொழிற்சாலையில் மாசடைதலைத் தடுக்கும் நடவடிக்கைகள்எடுத்தபின் தான் அது இயங்குவதற்கான பேர்மிட் வழங்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்.

சுற்றுடல் கழகத்தின் பிரசார ஒலி விழவேண்டிய இடங்களில் விழுந்து பயன் விளைக்கின்றது. கலைஞரின் கருத்து இதற்கு நல்ல உதாரணமல்லவா?

--வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கல்விவளர்ச்சியில் அதிபர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்'

(அராலி)

''மாணவர்களது கல்வி வளர்ச்சியிலே அதிபர்கள் கூடிய கவனம்செலுத்தவேண்டும். தமிழ் மக்களின் சொத்தாகிய கல்வியை அழிய விடாது வளர்க்கவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உண்டு. ஆசிரியர்கள் இத்தொண்டினைச் சிறப்பாகச் செய்ய அதிபர்கள் ஊக்கமளிக்கவேண்டும். பாடசாலைகளின் சகலவிதமான வளர்சிகளையும் கருத்திற்கொண்டு தொண்டாற்றும் அதிபர்கள் கல்வித்திணைக் களத்தால் அனுப்பப்படும் சுற்றுநிருபங்கள்கடிதங்கள், கேள்விக்கொத்துக்களுக்கும் உடனுக்குடன் அறிக்கைகள் சமர்ப்பித்து நிர்வாகம் சிறப்படைய உதவ வேண்டும்.''

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற போது தலைமையுரை நிகழ்த்திய வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

''அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; அதிபர்களுக்கு தற்போது வேலைப்பளு அதிகரித்திருப்பதை மறுக்கமுடியாது. இருந்தும் திணைக்களத்திலிருந்து வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்பினால்தான் பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றலாம். ஆசிரியர்கள் பற்றாக்குறை, தளபாடக்குறை, கட்டடத் தேவை முதலான பல விடயங்களைத் தெரிவித்திருக்கிறீர்கள். அவற்றை என்னாலானவரை அதிகாரிகள் மூலம் நிறைவேற்ற முயற்சிப்பேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்றைய சூழ்நியில் பாடசாலைகளை நடாத்துவதென்பது பெரும் கஷ்டமானது. இக்கஷ்டங்களை நன்றாக உணர்ந்து அவற்றுக்கு ஏற்றபடி மாணவர்களை நற்பிரஜைகளாக்கும்வகையில் ஈடுபடுமாறு உங்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்'' என்றார்.

கொத்தணி மட்டத்தில் இசை, நாடகப் போட்டிகள் நடாத்துவதுபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வட்டுக்கோட்டை கொத்தணிக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் பாடசாலைகள் பற்றிய குறைபாடுகள், தேவைகள் பற்றிக் கூறினார்கள்.

---

வேலணை

## ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை

(வேலணை)

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் விசேட கூட்டம் கூட்டுறவு சிரேஷ்ட உத்தியோகத்தர் திரு. எம். கே. முருகையா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

திரு. பொ. நடராசா (தலைவர்) திரு. கி. பீற்றர் (உபதலைவர்) மற்றும் திருவாளர்கள் பொ. மாசிலாமணி, பொ. சந்திரசேகரம், செ. சண்முகவடிவு, இ. மகேந்திரன், க. புண்ணியமூர்த்தி ஆகியோர் சபையின் ஏனைய அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## பாராட்டுவிழா

(வேலணை)

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக கடமையாற்றி ஓய்வுபெறும் திரு. பே. சிவபாதசுந்தரத்திற்கு பாடசாலை ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியன ஒன்றிணைந்துசேவை நலன்பாராட்டுவிழாவொன்றை அண்மையில் நடாத்தினர்கள்.

கல்லூரி அதிபர் திரு. செ. வரதலிங்கம் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

---

'அபிராமி அந்தாதி'

## மனனப் போட்டி

(அச்சுவேலி)

இடைக்காடு இந்து நெறிக் கழகம், அச்சுவேலி கோவில் பற்று பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே 'அபிராமி அந்தாதி' மனனப் போட்டியை நடாத்தவுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அச்சுவேலி கோவில்பற்றுப் பகுதி பாடசாலை மாணவர்கள் இடைக்காடு இந்து நெறிக்கழகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கழகச் செயலாளர் திரு. வே. சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

---


## "குவைத் நாட்டுக்கு உடனடி வேலைவாய்ப்பு"

## VACANCIES IN KUWAIT

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Female Cleaners | KD 25 |
| 2. Aluminium Fitters | KD 75 |
| 3. AirPort Porters | KD 50 |
| 4. Black Smith (பூட்டுவேலை) | KD 75 |
| 5. Diesel Mechanics (Hvy Veh) | KD 80 |
| 6. Mechanic Asst | KD 65 |
| 7. Painter | KD 65 |
| 8. Hammer Smith (Denter) | KD 75 |
| 9. Auto Electrician | KD 75 |
| 10. Tyre Man | KD 55 |
| 11. Steel Fixer | KD 65 |
| 12. Pipe Fitter (Clay) | KD 65 |
| 13. Masons (Tile, Brick) | KD 65 |
| 14. Kuwait Licence Hvdriver | KD 95 |
| 15. Heavy Eqp Operator | KD 100 |

### VACANCIES IN OMAN

| | |
|---|---|
| 1. Machinery Salesman | RO 150 |
| 2. Office Clerk (Male) | RO 70 |
| 3. Henna Designer | 70 |
| 4. Embrodery Tailors | 70 |
| 5. Ladies Dress Tailors | 70 |

## Vacancies In Saudi Arabia

CLEANERS — SR 350

சகல தரப்பினருக்கும் எம்மிடம் வேலை வாய்ப்பு உண்டு. பாஸ்போட், 6 படம், அனுபவச் சான்றுடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். எக்காரணத்தைக் கொண்டும் முற்பணம் அறவிடப்படமாட்டாது:

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

# T. V. Travels

Brown Road, Kokuvil.

(ஏ 286)


---

# இராசி பலன்

17-06-1989

திரயோதசி பகல் 11-38 வரை; அனுஷம் பின்இரவு 5-32 வரை; சித்தயோகம், இராகு காலம் 8-54 முதல் 10-28 வரை. சுபகருமங்களுக்கு உகந்த தினம்.

மேடம்;- கடமை தவறுதல், ஆணவப்போக்கு, குடும்பத்தில் அமைதியின்மை, பணமூலமான கவலை, தொழில் லாபக்குறைவு.

இடபம்; நோய்வாட்டும், தொழில்பீடை, அதிகாரிகள் சினம், பயணங்களால் செலவு, குடும்பவிரோதம்.

மிதுனம்:- அந்நியர் சகாயம். விவாகமுயற்சி, பணவரவு, அறிஞர் சந்திப்பு, மனகிழ்ச்சி, உறவு.

கடகம்:- கடல்பயணம், காதல்களிப்பு, பெண்களால் உதவி, கல்விவிருத்தி, அதிகார தோரணை, குடும்பசுகம்.

சிங்கம்:- எண்ணிவவை தடைப்படும், சகோதரர் பகை, வீண்வம்பு, கணவர் துன்பம், கடும்யோசனை.

கன்னி.- வைத்தியசெலவு, தந்தைவழி துயரம், காதல் பிரிவு, பொருள் நஷ்டம், வேலைப்பளு.

துலாம்;- கடித உறவு, மாமன்வகை உதவி, பெரியோர் ஆசி, உல்லாசப்பயணம், குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்:- துன்பமயமான பிரச்னை. அந்நியவாசம், ஏமாற்றப்படுதல், சொத்துப் பிரச்னை, கடும் வாக்குவாதம்.

தனுசு:- குடும்பசந்தோஷம், பதவி உயர்வு, தானதர்மம். வெளியுலக பயணம், மாதா உதவி.

மகரம்:- பிரச்னை உருவாதல், பணமுடை, எதிரிகள் குடும்பத்தில் சந்தேகம், அதிர்ச்சி.

கும்பம்;- குடும்பத்ல் அந்நியோன்யம், வழக்கு விவகாரம், தொழில் சிறப்பு, புதிய முதலீடு, சுபகாரியம்.

மீனம்:- பிரிந்தவர் இணைவும், மனநிறைவு, காதல் களிப்பு, வைத்தியசெலவும், ஆலயதரிசனம், புகழ்.

---

## இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் சுயதொழில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சுயதொழில் வேலைவாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியால் நடாத்தப்படும் இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட இலங்கை வங்கிகளின் முகாமையாளர்களும் உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டத்தின் சிறப்பம்சங்கள் பற்றி இக்கூட்டத்தில் விளக்கவுரைகள் இடம்பெறும்.

---

நயினையில்

## சென்ஜோன் அம்புலன்ஸ் வழமைபோல் சேவை

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன் அம்புலன்ஸ் படை, வழமைபோல்தமது முதலுதவி முகாம் ஒன்றை நயினை நாகபூஷணி அம்மன் கோவில் மேற்கு வீதியில் அமைத்துள்ளது. இவர்கள் இம்மாதம் 17, 18, 19, 20-ம் திகதிகளில் நடைபெறும் விசேட உற்சவங்களாகிய சப்பரம், தேர், தீர்த்தம், தெப்பத்திருவிழா காலத்தில் பக்தர்களின் நலன் கருதி அங்கு சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சேவைக்குப் பொறுப்பாக மாகாண நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. செ. செல்வரஞ்சன் கடமையாற்றுகிறார். இவர்களுக்கு உதவியாக யாழ். படை அத்தியட்சகர் திரு. என். நகுலராஜ். நல்லூர் படை அத்தியட்சகர் திரு. எஸ். கண்ணதாசன், நல்லூர் படை நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. ஏ. கிருஷ்ணராஜா ஆகியோர் உட்பட்ட விசேடமுதலுதவிப் பயிற்சிபெற்ற சுமார் 50 அங்கத்தவர்கள் அங்குகடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கோயில்பகுதிகளிலும் இறங்கு துறைகளிலும் கடலிலும் பக்தர்களின் நலன் கருதி வழமைபோல் சேவையாற்றுகின்றனர். (வி)

---

## பாண் தயாரிக்க முடியாதநிலை

[புங்குடுதீவு]

புங்குடுதீவுப் பகுதியில் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதனால் அப்பகுதியிலுள்ள பாண் பேக்கரிச் சொந்தக்காரர்கள் பாண் தயாரிக்கமுடியாத நிலைமைஏற்பட்டுள்ளது. அதனால்பாணுக்கு தட்டுப்பாடு ஏற்படலாமென தெரிகிறது.

---

## பாதை சீர்கேடு

[நெல்லியடி]

நீண்டகாலமாக கவனிப்பாரற்ற நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படும் நெல்லியடி - சோனப்புவீதியால் பிரயாணம் செய்யும் பாடசாரிகள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவ்வீதியால் பிரயாணம் செய்யும் வாகனங்கள் மெதுவாகவே பயணம் செய்யமுடிகின்றது.

---

## அதிபராக நியமனம்

(வேலணை)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. பொ. கேதாரநாதன் இம்மாதம் முதல் பதவிஉயர்த்தப்பட்டு அதிபராக நியமிக்கப்பட்டதுடன் வேலணை கொத்தணிப்பாடசாலைகளினது அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## ஆயுள்வேத

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும் அறியப்படுகிறது.

ஆயுள்வேத வைத்தியசாலைகளை பொதுமக்கள் அண்மைக்காலமாக நாடுவதால்மருந்து வகைகள் தீர்ந்து போவதே தட்டுப்பாட்டு நிலைக்குக்காரணமாகக் கூறப்படுகிறது.

---

## சகல கூட்டுறவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாக கட்டியெழுப்ப வேண்டும்.

1971-ம் ஆண்டுக்குப் பின் சுதந்திரமாக இயங்கும் நிலையை நாம் இழந்திருந்த போதும் தற்போது மீண்டும் சுதந்திரமான முறையில் இயங்க வழிபிறந்துள்ளது.

ஆகவே யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு சங்கங்களும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் அங்கத்துவம் பெற்று கூட்டுறவுச் இயக்கத்தை ஓர் சிறந்த அமைப்பாக கட்டியெழுப்ப உதவ வேண்டும்.''

---

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி மீனவர்களுக்கு வருடாந்த நிவாரணமாக 5 வருடங்களாக வழங்கப்பட்ட மீன்பிடி வலை, பிளாஸ்டிக் படகு, இழுவை யந்திரம் போன்றவை கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை.

மேற்படி விடயமாக கடற்றொழில் அமைச்சின் வடமராட்சி உபகாரியாலயம் மேற்படி அமைச்சிற்கு பலதடவை முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்வித பலனும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இசை, நடன, நாடக போட்டிகள்

(அராலி)

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான இசை, நடன, நாடகப் போட்டிகள் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 23ம் திகதி வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான சகல நடவடிக்கைகளையும் போட்டிக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்போட்டியில் முதலிடம் பெறும் நிகழ்ச்சிகள் பண்டத்தரிப்பு கோட்டக்கல்விப்பிரிவு போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

---

## புதிய நிர்வாகிகள்

(மட்டுவில்)

சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்சங்கத்தின் புதிய இயக்குநர்சபையின் உறுப்பினர்களாக கீழ் காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு பொ. சின்னராஜா, உபதலைவர்: திரு. சி. கிருஷ்ணன், செயலாளர்: திரு. வ. கதிரேசு திருவாளர்கள் க. சோமசு செல்லையா. நா. சின்னவர், இ. செல்லத்துரை. க. சின்னத்துரை, ச. வாரித்தம்பி ஆகிய 6 இயக்குநர்களைக்கொண்ட ஒரு சபையும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாவட்ட மெய்வல்லுநர் போட்டியில் செல்வரட்ணம் சுதேசியாவின் மூன்று புதிய சாதனைகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் இம்முறை நான்கு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

பெண்கள் பிரிவில், அல்லைப் பிட்டியைச் சேர்ந்த செல்வி செல்வரெட்ணம் சுதேசியா தான் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியது குறிப்பிடத்தக்கது.

இவர் மூவாயிரம் மீற்றர் ஓட்டத் தூரத்தை 12 நிமிடங்கள் 41.6 செக்கன்களில் ஓடி புதியசாதனையையும், ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தூரத்தை 22 நிமிடங்கள் 41.6 செக்கன்களில் ஓடி 2-வது புதிய சாதனையையும், ஆயிரத்துஐநூறு மீற்றர் ஓட்டத்தூரத்தை 42.5 செக்கன்களில் ஓடி 3-வது புதிய சாதனையையும் ஏற்படுத்தினர்.

ஆண்கள் பிரிவில், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த எஸ். தயாளன் ஈட்டி எறிதல் போட்டியில் 43.87 மீற்றர் தூரத்துக்கு, ஈட்டிஎறிந்து புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தினர்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். ஏகாம்பரம் செய்திருந்தார். (வி)

## தபால் விநியோகம் சீரடைந்துள்ளது!

(சுன்னாகம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கான தபால் சேவை சீராக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தினமும் கொழும்புக்கான கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இதுகாலவரை தபால் விநியோகத்தில் ஏற்பட்டு வந்த தாமதமான நிலை அறவே தவிர்க்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பிற்பகல் ஒரு மணிக்கு முன்பதாகத் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாமென சுன்னாகம் தபால் நிலைய அதிபர் தெரிவித்தார். கடிதங்கள் பதிவுசெய்தல் காசுக்கட்டளை சம்பந்தமான விடயங்களும் பணக்கொடுக்கல் வாங்கல் அலுவல்களும் உடனுக்குடன் கவனிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுன்னாகம் தபால் நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் உபதபாலகங்களிலும் வழமையான பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்கு வேண்டிய சகல ஒத்துழைப்புக்களும் சுன்னாகம் தபால் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சென்.மேரிஸ் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி: நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே 'அமரர் செபஸ்தியாம்பிள்ளை' ஞாபகார்த்தக் கேடயத்துக்காக வருடாந்தம் நடாத்திவரும் '7-பேர்' பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மேற்படி கழகத்தின் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் மொத்தம் 13 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. நாளை ஆரம்பமாகும். போட்டியில் குருநகர் பாடும்மீன் கழக 'பி' பிரிவுக் கோஷ்டி கிறீன் பீல்ட் கழகத்தை எதிர்த்து மோதும். 2-வது போட்டியில், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டியை எதிர்த்து யாழ். முஸ்லிம்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டி மோதும்.

நாளை மறுதினம் நடைபெறும் போட்டியின் முதல் ஆட்டத்தில், சென். றேக்ஸ் கழகத்தை எதிர்த்து அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் கழகம் மோதும். 2-வது ஆட்டத்தில் யாழ். முஸ்லிம்ஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதும்.

நாளையிலிருந்து தொடர்ச்சியாக நடைபெறும்இப்போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும். கடந்த வருடம் நடைபெற்ற இப்போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் சாம்பியன் கேடயத்தை தட்டிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## ஆரோக்கிய வாழ்வுக்கு

### சாந்தியாசனம்

சாந்தியாசனம் மிக முக்கியமானது. மனம் ஒரு நிலையடையும். விரிப்பில் நிமிர்ந்து படுத்துக்கொண்டு சரீரத்தை தளர்த்தி விடவேண்டும்.

உயிரற்ற உறுப்புகள் மாதிரி வைக்கவும். பின்னர் ஒவ்வொரு உறுப்புகளையும் நினைத்து விரல்களே உங்கள் வேர்களைச் சரிவரச் செய்து நீங்கள் ஆரோக்கியம் அடைவீர்களாக ஓம் சாந்தி, சாந்தி சாந்தி, கால்களே, தொடைகளே, இடுப்பே, மர்மஸ்தானமே, மூலமே, பெருங்குடலே உங்கள் வேலைகளைச் சரிவரச் செய்து நீங்கள் ஆரோக்கியமடைவீர்களாக ஓம் சாந்தி சாந்தி, சாந்தி, சிறுகுடல் இரைப்பை, கிட்னி, பித்தப்பை, கல்லீரல், மண்ணீரல், இருதயம், சுவாசப்பை இவைகளை மேல் சொன்னது போல சொல்லி கைகள், புஜங்கள், கழுத்து, நாடி, வாய், மூக்கு, காதுகள் கண்கள், தலை இவைகளை தனித்தனியே சொல்லி ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று சொல்லுதல் வேண்டும். மனம் ஒரு நிலையடையும்.

### சுவாசப் பயிற்சி

விரிப்பில் பத்மாசனம்போட்டும் இருக்கலாம். பத்மாசனம் போட வராதவர்கள் சித்தாசனம் அல்லது வச்சிராசனத்தில் இருந்து கொண்டு நிமிர்ந்திருந்து வலதுபெருவிரலாலும் மோதிர விரலாலும் மூக்கைப் பிடித்துக் பெருவிரலை எடுத்து வலது நாசியால் உள்ளே இருக்கும் சுவாசத்தை வெளிவிட்டு உடனே வலது நாசியால் உள்ளே இழுக்க வேண்டும். பின்னர் வலது நாசியைப் பெருவிரால் மூடிக் கொணடு இடது நாசியை மூடியிருக்கும் மோதிர விரலை எடுத்து இடதுநாசியை திறந்து வெளிவிடவேண்டும். விட்டு முடிந்தவுடன் அந்த நாசியை, திரும்ப இழுக்கவேண்டும். இழுத்த நாசியை மூடி வலது நாசியால் வெளிவிடவேண்டும். இப்படிச் செய்தால் ஒரு தடவை. இதுபோல்10 தடவை செய்யவேண்டும். மாலையில் வலது நாசியை மூடி இடது நாசியால் ஆரம்பிக்கவேண்டும்.

### சுவாசப்பயிற்சியால் ஏற்படும் பலன்

உள்ளே இருக்கும் 10 வாயுக்களும் சுத்தமடைந்து தன் தன் தொழிலை சரிவரச் செய்கிறது. சுவாசப்பை சுத்தமடைகிறது. இரத்தக் குழாய்களில் கொழுப்பு பிடிக்காது. புற்றுநோய் பிடிக்காது. வீரம் உண்டாகும். நோய்கள் அணுகாது. [illegible] மன் முதலிய நோய்களை தடுக்கும் மருந்து. சுவாசப்பயிற்சியால் முகம் அழகு பெறும். சுக்கிலம் இறுகும். மலட்டுத்தன்மை விலகும். ஞாபகசத்தி உண்டாகும். கல்வி அறிவு வளரும். மன அடக்கம் உண்டாகும். காற்றோட்டமுள்ள இடத்தில் செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு 3 தடவை செய்யலாம். காலை, மதியம், அந்தி பிற்பகல் உணவருந்தி 30 நிமிடங்களின் பின் சுவாசப் பயிற்சி செய்யலாம்.

சுவாமிஜி
ஸ்ரீ சிதானந்தயோகி

## சுன்னாகம் தபாலகத்தில் வழமையான கருமங்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபால்நிலையத்தின் வழமையான கருமங்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து பெரும் அளவில் நிலையான வைப்புச் சான்றிதழ்கள் வரவழைக்கப்பட்டு அதுசம்பந்தமான பணிகளும் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக சுன்னாகம் தபால் நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

ஒருவருட முடிவில் மாற்றிக் கொள்ளக்கூடியதான 500ரூபா 1000 ரூபா, 10,000 ரூபா பெறுமதியான சான்றிதழ்களுக்கு பதினைந்து சதவீத வட்டியும் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தேசியசேமிப்புத் திட்டத்தின் கீழ் பணத்தை வைப்புச் செய்வதற்கென சுன்னாகத்தை அண்டிய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்வதில் உள்ள பல சிரமங்களை தவிர்த்துக்கொள்ளலாம் எனவும், இவ்வாறான சான்றிதழ்களுக்கு தற்போது பணம் வழங்குவதில் எதுவித இழுபறிநிலையும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தபாலகங்களில் தடுத்து வைக்கப்படும் வெளிநாட்டுக் கடிதங்கள்!

(சுன்னாகம்)

முறையற்றவிதத்தில் பாவிக்கப்படும் முத்திரைகள் ஒட்டப்பட்ட பல வெளிநாட்டுக் கடிதங்கள் சுன்னாகம் தபால் கந்தோரிலும், நூற்றுக்கணக்கான கடிதங்கள் கொழும்பு தலைமை தபால் கந்தோரிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக 'ஈழநாடு' வுக்குத் தகவல்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் தபால் நிலையஅதிபர் திரு. இ. திருநாவுக்கரசு முறையற்ற உபயோக முத்திரைகள் ஒட்டப்பட்ட பல கடிதங்களை 'ஈழநாடு' வுக்குக் காண்பித்துள்ளார்.

'பிசின்' போன்ற பொருளை முத்திரையின் மேலாகத்தடவி தபால் கந்தோர் 'சீல்' படாதவாறு தடுக்கபடுவதாகவும், பின்பு அந்த முத்திரை வெளிநாட்டிலுள்ளவர்களால் இங்கு அனுப்பப்பட்டு அது சலவை செய்யப்பட்டு மீண்டும் புதிய முத்திரையாக உபயோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டிற்கு அனுப்பப்படும் தபால் முத்திரைகளின் குளறுபடிகள் மேலிடத்தால் கண்டுபிடிக்கப்படின் தபால் அனுப்பப்படும் தபால் கந்தோர்களின் ஊழியர்களில் நடவடிக்கை எடுக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளதால் இவ்விடயத்தில் ஊழியர்கள் மிகவும்விழிப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வெளிநாட்டுத் தபால்கள் உரியவிலாசத்திற்குச் சென்றடையாமல் அவர்கள் போட்ட தபால் கந்தோர்களிலும், கொழும்பிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை உணர்ந்தால் வருங்காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலை வளங்களைப் பகிர்ந்தளிக்க கொத்தணி கல்விமுறை அமைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

"கொத்தணிக்கல்விஅமைப்பு முறையானது பாடசாலைகளிலுள்ள வளங்களை தகுந்த முறையில் பகிர்ந்து பாடசாலைக்கான மேம்பாட்டுக்கு உதவுவதற்காகவே அமைக்கப்பட்டது. ஆனால் சில கொத்தணி அதிபர்கள் மூலாதாரப் பாடசாலையின் வளர்ச்சியில் மட்டும் கவனம் செலுத்துகிறார்கள். இது கொத்தணி அமைப்பின் நோக்கத்தையே இல்லாமல் செய்துவிடும்.''

இவ்வாறு யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, கொத்தணி அதிபர்களுக்கு நேற்றுமுன் தினம் அறிவுறுத்தல் வழங்கிப் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கொத்தணி அதிபர்களுக்கான கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது: ஒரு கொத்தணி அமைப்பில் மூலாதாரப் பாடசாலையாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை அப்பகுதிப் பாடசாலைகளில் வளம்மிக்கதாக இருக்குமென்பது உண்மை. ஆயினும், இதே கொத்தணி அமைப்பிற்குள் அடங்கும், பிற சிறிய, பெரிய பாடசாலைகள் வளம்குன்றிய நிலையிலிருக்கும். எனவேஇந்த வளம் குன்றிய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு மூலாதாரப் பாடசாலையின் வளங்கள் பயன்படுத்தப்படவேண்டியது முக்கியமாகும். இதனைவிடுத்து ஓரிரு வளமுள்ள பாடசாலைகளின் வளத்தை மூலாதாரப் பாடசாலைக்குப் பயன்படுத்தி அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக மட்டும் செயல்படுவது சரியல்ல. இதனை கொத்தணி அதிபர்கள் நினைவில்வைத்துச் செயல்படவேண்டும்.

இக் கூட்டத்திற்கு யாழ். கோட்டக்கல்வி அதிகாரி திரு. ரி. தியாகராசா தலைமை வகித்தார்.

சகல கொத்தணி அதிபர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்கள்.

## வலைப்பந்தாட்டம் அரியாலை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் ஆதரவில், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வந்த பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டியில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி கழகம் சாம்பியன் போட்டியில் தன்னை எதிர்த்து விளையாடிய 'வைக்கிங்ஸ்' கழகத்தை 31–24 புள்ளிகள் வித்தியாசத்தால் தோற்கடித்து சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. (வி)

## நிவாரண வேலைகள்

(நல்லூர்)

வேலணை கோட்டக்கல்வி அலுவலகத்தில் நிவாரண காவலருக்கான வேலை வெற்றிடமிருப்பதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் இம் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப் படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நியமனம்

(சுன்னாகம்)

காங்கேசன்துறை கல்விவட்டாரத்தைச் சேர்ந்த கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தின் அதிபராக திரு. ச. அண்ணாமலை நியமனம் பெற்றுள்ளார். இவர் முன்பு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியவர்.

## கிரிக்கெட் குழு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கொத்தணிப் பிரிவில் ஆசிரியர்களைக் கொண்ட கிரிக்கெட் அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் கிளிநொச்சி மத்தியகல்லூரி, கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம், திருவையாறு வித்தியாலயம், கனகாம்பிகை வித்தியாலயம், கனகபுரம் வித்தியாலயம் ஆகிய பாடசாலை ஆசிரியர்கள் அங்கம்வகிப்பதாக இக் கிரிக்கெட் அணிக்கு பொறுப்பாக உள்ள ஆசிரியர் திரு. கோபாலராஜா தெரிவித்தார்,

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலை கட்டிட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு ஆறு கட்டிடப்பரிசோதகர்களை, கல்வி அமைச்சு நியமித்துள்ளது.

யாழ். கல்வித்திணைக்களத்தில் இரண்டு கட்டிட பரிசோதகர்களும் நான்கு கட்டிட உதவிப் பரிசோதகர்களும் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீசெல்வ விநாயகராலய ஜீர்ணோத்தாரண அஷ்ட மந்தன மகா கும்பாபிஷேகம் பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோ. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

## அமைதியின்பின் தான் அபிவிருத்தி வேலைகள்

(நல்லூர்)

'இந்த நாட்டிலே சமாதானம் அமைதி ஏற்பட்டபின்னர்தான் அபிவிருத்தி வேலைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும், என்று சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்,

கைதடிச் சந்தியில் இடம்பெற்ற கலையரங்கத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அரங்கைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நாய் குரைத்தவுடன் பயந்து நடுங்கும் நிலையில் நாம் வாழ்கிறோம். எங்கு என்ன சத்தம் கேட்டாலும் அச்சமடைகிறோம். இதனால் உளரீதியாகப் பாதிக்கப்படுகிறோம்.

தலைவர் திரு. க. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கைதடி தெற்கு சனசமூகநிலைய நாடகமன்றஉறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

## நயினை அம்மன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

21-ம் திகதி வரையிலான காலங்களில் குறிகாட்டுவான் துறைமுகத்திலும் அதற்கு அண்டிய பகுதிகளிலுள்ள மீன்பிடிப் படகுகள் அனைத்தும் புளியந்துறை, இறுப்பிட்டித்துறைமுகங்களில் கட்டப்படவேண்டுமென உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

யாத்திரிகர்களுக்குச் சென்ற வருடங்களைப் போல இவ்வருடமும் அமுதசுரபி அன்னதான சபையினரால் கடந்த 10-ம் திகதி அன்னதானம் வழங்கப்பட்டுவருகின்றது. திருவிழாக்காலங்களில் யாத்திரிகர்களினது தாகசாந்திக்காகத் தண்ணீர்ப்பந்தல் நடத்தும் பொதுஸ்தாபனங்களுக்கு வேலணை பிரதேச சபையினால் பௌவுசர் (உப அலுவலகம் புங்குடுதீவு)மூலம் இலவச குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்த்திருவிழா அன்று வேலணைத் துறையூரிலும், வேலணை வங்களாவடி முருகன் ஆலய முன்றலிலும் தாகசாந்தி நிலையங்கள் சென்ற வருடங்களைப் போல இவ்வருடமும் அமைக்கப்படவிருக்கின்றன.

ஆலயத்தின் 3-ம் திருவிழாவான 7-ம் திகதி முதல் இந்திய அமைதிகாக்கும் படையினரும் நயினாதீவில் முகாம் அமைத்துள்ளனர்.

**ஹரன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்-பிரபு நடித்த
**சின்னத்தம்பி பெரியதம்பி**

**நியூசாந்தி** யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள் வாள்சண்டைகள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.
**MAJESTIC THUNDERBOLT**
(C/scope)

## உணவு முத்திரை விநியோகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பகுதியில் உள்ள உணவு முத்திரை பாவனையாளர்களுக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

## புனரமைப்பு

(சாவகச்சேரி)

இலங்கை இராணுவத்தினால் தாக்குதலுக்குள்ளாகி சேதமாக்கப்பட்ட நுணாவில்கிழக்கு சர்வசாதன சனசமூகநிலையத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கும், தையல் பயிற்சி நிலையம் ஒன்றினை அமைப்பதற்கும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இரண்டு லட்சம் ரூபாவை சனசமூக நிலையத்துக்கு வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக நிலையப் பிரமுகர் தெரிவித்துள்ளார்.

## 70ம் வருட

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மகளே அதை 1910ம் ஆண்டில் தந்தையர் தினமாகஆரம்பித்தார். எனினும் 1919ம் ஆண்டுதான் ஜனதிபதி உவில்சன் தந்தையர் தினத்தை உத்தியோக பூர்வமாக அறிவித்தார். ஒவ்வொரு வருடமும் யூன்மாதம் மூன்றாம் ஞாபிற்றுக்கிழமை இதற்கென ஒதுக்கப்பட்டது. சிவப்பு அல்லது வெள்ளை றோசா மலரே தந்தையர்தின மலராகவும் தெரிவுசெய்யப்பட்டது. றோசா மலர்ச்சின்னம் அதிக வரவேற்புப்பெறவில்லை. ஒருமுறை நடைபெற்ற வேதாகம வகுப்பில் அதைமாற்றி ''டான்டேலியன்'' என்னும் மலரைத் தெரிவுசெய்தனர். எவ்வளவு தூரம் அது மிதிக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகம் அது வளரும்.

தந்தையர் தினத்தில் தந்தையருக்கு எதையும் அன்பின் பரிசாக வழங்கலாம். பெரும்பாலும் தந்தையர் விரும்பும் பொருளாக இருப்பதே விரும்பத்தக்கது. எனினும் மிக அவசியமானது பிள்ளைகள் செலுத்தும் தூய அன்பும், நன்றியுணர்ச்சியுமேயாகும். பிள்ளைகளுக்கும் தந்தைக்குமிடையில் ஒரு மனப்பூர்வமான உண்மை அன்புணர்ச்சி தோன்ற இத்தினம் ஏற்றவழி வகுக்கவேண்டும்.

1924-ல் ஜனதிபதி கல்வின் கொலிட்ஜ், 'தந்தையர்தினம் பிள்ளைகளுக்கும், தந்தையருக்குமிடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுடன் தந்தையர்க்கு தமது கடமையை உணரச் செய்யக்கூடியதாகவும் அமையவேண்டும்' என்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

துருக்கியில் சென்றவருடம் தந்தையர் தினம் கொண்டாடப்பட்ட போது அரசியல் கைதிகள் தமது குடும்பத்தினரைச் சந்திக்க வசதி செய்யப்பட்டது. தலைநகராகிய அன்காராவில் ஒவ்வொருகைதியும் தனது அருமைத் தந்தையை இருபது நிமிடம் சந்தித்துப் பேச அனுமதி வழங்கப்பட்டது.

மேலைத்தேச நாடுகளில் அழகான கருத்துள்ள வாழ்த்து அட்டைகள் கோடிக்கணக்கில் விற்கப்படுவதை நன்கறிவோம். இலங்கையிலும் நாம் தந்தையர் தின வாழ்த்து அட்டைகளை அனுப்புகிறோம். இத்தினத்தில் பிள்ளைகள் தாங்கள் சேமித்த பணத்தில் ஏதாவது அன்பின் சின்னமாக சிறு பொருளை வாங்கிக் கொடுப்பதுடன் அந்நாளைப் பெற்றோருடன் சேர்ந்து மகிழ்வுடன் கழிப்பது நன்மையல்லவா?

எனவே, எங்கள் தந்தையின் போதகத்தைத் தள்ளாது எங்களைப் பாதுகாத்து அறிவூட்டி அரவணைக்கும் தகப்பன் என்னும் தலைசிறந்த ஈவை எமக்குத் தந்த இறைவனை இன்றைய தந்தையர் தினத்தில் முழுமனதுடன் நன்றியுடன் நினைத்துப் போற்றுவோமாக.

# பிரஜைகள் தொண்டர் படை: நகர கமாண்டன்ட் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

பிரஜைகள் தொண்டர் படை தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட பக்கச்சார்பற்ற, அரசியல் சார்பற்ற ஓர் அமைப்பாகும் என்று யாழ். நகரக் கமாண்டன்ட் அலுவலகம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''பிரஜைகள் தொண்டர் படையின் அமைப்புக் குறித்து ஒரு சில யூகங்கள் நிலவிவருகின்றன.

''தற்போதுள்ள பிரஜைகள் தொண்டர்படையில் 1532 தமிழர்களும், 205 முஸ்லிம்களும், 148 கிறிஸ்தவர்களும், 43 சிங்களவர்களும் அங்கம் வகிக்கின்றனர் என்பதை பொதுமக்களின் தகவலுக்காக அறியத் தருகிறோம். இப்படையில் தற்போது அங்கம் வகிக்கும் தொண்டர்களுக்கு எந்த ஒரு கட்சியுடனும் குறிப்பிட்ட தொடர்பு கிடையாது. இதனால் அவர்கள் பக்கச்சார்பற்றவர்களாகவே இருக்கின்றனர்.

''வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுதந்திரமான பிரஜைகள் தொண்டர்படை நிலையங்களில் அவர்களை சேவைக்கமர்த்துவதே நோக்கமாகும்.

''இந்தப்படைக்கு அதன் சொந்த தலைமை அலுவலகம் உள்ளது. அதற்கென முறையான உத்தரவு, அமைப்பு முறை ஒன்றும் உள்ளது.

''உறுதியும், அனுபவமும் மிக்க தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரான திரு. ரி. ஈ. ஆனந்தராஜாவின் தலைமையில் இந்தப்படை இயங்குகிறது. பிரஜைகள் தொண்டர் படையில் அங்கம் வகிப்போரின் மேற்குறிப்பிட்ட இன விகிதாசார அமைப்புமுறை அது அரசியல் சார்பற்ற ஓர் அமைப்பு என்பதையே எடுத்துக்காட்டுகிறது. உள்ளத்தில் மக்கள் சேவையும், தியாக உணர்ச்சியும் இலட்சியமும் கொண்டு அச்சமும், பாரபட்சமுமில்லாமல் சேவையாற்றக்கூடிய திடகாத்திரமான படித்த இளைஞர்கள் சகலருக்கும் மக்கள் தொண்டர்படையில் சேர்ந்துகொள்வதற்கு வாய்ப்பிருக்கின்றது.

''பிரஜைகள் தொண்டர் படை ஆரம்ப கட்டத்தில் உள்ள ஓர் அமைப்பென்றபோதிலும், பாதுகாப்பான பந்தோபஸ்து சுற்றுடல் ஒன்றையேற்படுத்தவும், அசம்பாவிதங்களை தணியச்செய்யவும் பொதுச் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் பெரும் சேவையாற்றி வருகிறது.''

## சமயப் போட்டி ஒத்திவைப்பு

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினரால் இன்று நடாத்தப்படவிருந்த சைவ சமயப்போட்டி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலிருந்து இந்திய அமைதிப்படை உடனடியாக வெளியேறுதென இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தையடுத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு இது தொடர்பாக நீண்டதொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

பத்திர முல்லையில் அண்மையில் இடம்பெற்ற வைபவமொன்றில் ஜனதிபதி திரு. பிரேமதாசா இந்திய அமைதிப்படையினர், ஜூலை மாத இறுதிக்குள் வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேற வேண்டுமெனக்கேட்டிருந்தார். இதற்கான உத்தியோக பூர்வ கடிதத்தையும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்தார்,

இதையடுத்து பிரதமர் காந்தியும் இலங்கை ஜனதிபதிக்கு இது தொடர்பான தமது முடிவை அனுப்பிவைத்தார். அந்தப் பதிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பதிலும் ஒன்றாகவே அமைந்திருந்தன. அதன்படி இந்திய படைகளின் வாபஸ், இலங்கை - இந்திய தரப்பிடையே பேச்சுக்கள் நடைபெற்றும்வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு ஒப்பந்தத்திலுள்ளவாறு அதிகாரங்கள் வழங்கப்படுவதையும் பொறுத்தே அமையுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து இலங்கைத் தரப்பில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட வேண்டிய தன் காரணங்களையும் குறிப்பிட்டு இலங்கைவெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், இலங்கைக்கு இந்திய அமைதிப்படைவரவேண்டிஏற்பட்ட சூழ்நிலையும் அதன் கடமைகளும், அது வாபஸ்பெற வேண்டிய சூழல் பற்றியும் இந்தியஅமைதிப்படை வாபஸ் பெறுவது பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி அண்மைக் காலங்களில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்தும் இலங்கையின் தன்னிறைமை, வருட இறுதியில் கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' மாநாடு குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனிச் சிங்களத்தில் காசோலைகள், கடிதங்கள்

(அச்சுவேலி)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுக் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு, கொடுப்பனவுகள் காசோலை மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [illegible] [illegible] காசோலைகள் தனிச்சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளன. காசோலையுடன் வைக்கப்பட்டுள்ள கடிதமும் தனிச் சிங்களத்தில் மட்டும் உள்ளது.

சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கும் காசோலைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர், பெறும் தொகை என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என அறிந்துகொள்ள முடியாமல் ஆசிரியர்கள் திண்டாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்று நடைபெறும் பயிற்சிநெறி

(சாவகச்சேரி)

பாலர் பாடசாலை ஆசிரியைகளின் பயிற்சி நெறிக்குப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை அறவழிப் போராட்டக் குழு இன்றும் நாளையும் அறவழிப் பணியகத்தில் நடாத்தவுள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கும்இப்பயிற்சி நெறியில் 75 மகளிர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

## சுகாதாரப் பழக்கம் அவசியம்

(சாவகச்சேரி)

''கிராம மக்கள் மத்தியில் சுகாதாரப் பழக்கவழக்கங்களை எடுத்துக்கூறுவதன்மூலம் அவர்களைத் தமது குடும்பங்களைத் திட்டமிட்டு வாழச் செய்யமுடியும். அவ்விதமான செயல்பாடுகளை இலங்கை குடும்பத்திட்டச் சங்கம் ஆற்றி வருகின்றது.''

இவ்வாறு யாழ். மாவட்ட இலங்கைக்குடும்பத்திட்டச்சங்கத்தின் அதிகாரி திரு. எஸ். அன்பானந்தன், கைதடி நுணாவிலில் ஆரம்பித்துவைக்கப்பட்ட குடும்பத்திட்டச் சங்கத் தொண்டர்களுக்கான மூன்று நாள் பயிற்சியின்போது தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. வி.எஸ். துரைராஜா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## நாளை அங்குரார்ப்பணம் நல்லூரில் லயன்ஸ் கழகம்

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் ஓர் அங்கமாக நாளை 18ம் திகதி நல்லூரில் லயன்ஸ் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுகின்றது. நல்லூர்ப் பகுதியில் மக்கள் சேவையில் ஈடுபாடுள்ளவர்களால் உருவாகும் இக்கழகத்தின் ஸ்தாபக தலைவராக ஒரு பெண்மணியே தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதுசர்வதேச லயன்ஸ் கழக அமைப்பில் ஒரு முன்னோடிச் சாதனையாகும்.

1966 முதல் இலங்கையில் லயன்ஸ் கழகங்கள் மலர்வுற்ற பொழுது முதல் மாவட்ட ஆளுநராக லயன் கே. சச்சிதானந்தர் 306 மாவட்டத்திற்கு தலைமை தாங்கினர். 1978ல் 306ஏ, 306பி என இருமாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுது 306பி மாவட்டத்தின் முதல் மாவட்ட ஆளுநராக லயன்ஸ் மனோகரன தலைமைதாங்கினர். சர்வதேச லயன்ஸ் இயக்குநர் சபையில் முதலில் இடம்பெற்ற இலங்கையர் என்ற புகழுக்கும் உரியவர் [லயன்ஸ்] விஜயநாதன்.

யாழ். யாவட்டத்தின் முதல் லயன்ஸ் கழகம் 'யாழ்ப்பாண லயன்ஸ்கழகம்' என்னும் பெயரில் 1973ல் அமரர் லயன் ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் உருவாகியது. அதைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை சாவகச்சேரி, கோப்பாய், அச்சுவேலி, மானிப்பாய் ஆகிய இடங்களில் லயன்ஸ் கழகங்கள் உருவாகின.

நல்லூரில் நாளை மலரப் போகும் லயன்ஸ் கழகத்தை கோப்பாய் லயன்ஸ் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றது.

— லயன் சண்
கோப்பாய் லயன்ஸ் கழகம்,

# ஜே. வி. பி. எச்சரிக்கை: அசம்பாவிதம் இல்லை!

# போக்குவரத்துச் சேவைகள் பாதிப்பு!

[கொழும்பு]
தென் பகுதியில் இந்தியப் பொருட்கள் மீதான பகிஷ்கரிப்பு மற்றும் இந்தியப் பிரஜைகள், தொழில் ஸ்தாபனங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் ஜே. வி. பி.யினரால் விடுக்கப்பட்டபோதும் நேற்றிரவு வரை மோசமான அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தென் பகுதியில் இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறும், இந்தியப் பிரஜைகளை வெளியேறக்கோரியும் ஜே.வி.பி.யினர் கடந்த 14ம் திகதி காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே. எனினும், காலக்கெடு முடிந்து மூன்று நாட்களாகியும் இந்தியப் பிரஜைகள் மீதோ, இந்திய தொழில் ஸ்தாபனங்கள் மீதோ எதுவித தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், வழமைபோல் ஜே.வி.பி க்கு எதிரான சிங்களவர்கள் மீதே அவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜே.வி.பி.யின் அச்சுறுத்தலுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி.யின் ஹர்த்தால் நடவடிக்கையினுல் நேற்றுக் கொழும்பு வீதியெங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

இ. போ. ச. சேவை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

## உரும்பராய் கிழக்கில் ரூ. 1 லட்சம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
பகல் வேளையில் வீட்டு ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் பிரவேசித்த இனந்தெரியாத கோஷ்டியொன்று நகைகள் பணம் உட்பட சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைத் திருடிக் கொண்டு மறைந்து விட்டது.

இச்சம்பவம் கிழக்கு உரும்பராயில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

குறிப்பிட்ட வீட்டின் சொந்தக்காரர்கள் வீட்டை பூட்டிவிட்டு வைத்திய சாலைக்குச் சென்றபோது இக்கொள்ளை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட வீட்டின் சொந்தக்காரர்யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (தி)

## சன்சோனி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கந்திஞல் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுவின் விசாரணை, திரு. சன்சோனி முன்னிலையிலேயே நடைபெற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது தெரிந்ததே.

வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் பணியாற்றிய திரு. சன்சோனி, வேறு பல ஆணைக்குழு விசாரணைகளுக்கும் தலைமை தாங்கிஞர்.

## வவுனியாவில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரரே மரணமானவர் எனத் தெரியவருகிறது.

சடலம் மரண விசாரணைக்காக வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவரது மறைவு குறித்து வவனியா ஈ. பி. ஆர். எல். எவ். வவனியா நகர அலுவலகத்தில் சோககீதம் ஒலித்தது.

## கொழும்பு
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சரக்கு வண்டியில் இலங்கை இராணுவத்தினருக்கான பொருட்கள் உட்பட, பிற பொருட்களும் வந்தன என்றும் மா, சீனி என்பன நேற்றைய சரக்கு வண்டியில் வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியபடை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேதங்களைப் பெரிதாக்கிக் கொள்வதாலும், குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதாலும் அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவதற்குப் பெரும் தடைகள் ஏற்படும். இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கிருந்து செல்வதை விரும்பும் எல்லாக் கட்சியினரும், குழுக்களும் அதற்குத் தடை ஏற்படாது பார்த்துக்கொள்வது நாட்டுப் பற்றுள்ள எல்லோரதும் கடமையாகும். நமது நாட்டில் தங்கியிருக்கும் அமைதிப் படையினரைக் கூடிய விரைவில் அனுப்பி விடல்வேண்டும். இதுபற்றிக் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. அமைதிப் படையினரை இங்கு வரவழைத்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. வடக்கிலும், கிழக்கிலும் ஏற்பட்ட சூழல் காரணமாக முன்னுள் ஜனுதிபதி அப்பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அமைதிப் படையை இங்கு அழைத்தார்.

வடக்கு - கிழக்கில் இடம் பெற்ற வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமாதானத்தை நிலைநாட்டத்தான் அவர்கள் இங்கு அழைக்கப்பட்டனர். ஆனுல் நடந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். வடக்கிலும், கிழக்கிலும் சமாதானம் உருவாகவில்லை. அங்கு போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிர்ப்பந்தம் அமைதிப் படைக்கு ஏற்பட்டது. அமைதிப் படை வந்திறங்கிய பின்னர் நமது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வன்செயல்கள் ஆரம்பித்தன.

''இந்தியப் படை வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. நாம் கேட்டுக்கொள்ளும் எந்த நேரத்திலும் அமைதி காக்கும் படையை வாபஸ் பெறத் தயார் என்று இந்திய அரசாங்கம் கூறியிருந்தது, இந்த அமைதிப் படையினர் இலங்கையின் ஜனுதிபதியின் விருப்பத்தின் பிரகாரம் வாபஸ் பெறப்படும் என்று இந்தியப் பிரதமரும் இந்திய அரசும் அடிக்கடி கூறி வந்தார்கள். அமைதிப்படை இங்கு வந்தபோது நம்நாட்டு மக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளும் வினு எழுப்பினுர்கள். அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் இலங்கையின் ஜனுதிபதி கேட்டுக்கொள்ளும் எந்நேரத்திலும் விலக்கிக்கொள்ள தயாராக இருப்பதாக இந்திய அரசு கூறியது.

இலங்கை மக்களின் ஆணையைப் பெற்ற நான் எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த வாக்குறுதிகளை இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நான் ஜனுதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இந்தியப் படையை வெளியேற்றுவேன் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தேன். இந்திய அமைதிப்படையை அனுப்புவது நன்று என நான் எடுத்த முடிவு இலங்கையில் வாழும் எல்லா இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் தவிர இலங்கையின் மதிப்பு வாய்ந்த அரசியல் கட்சிகள் எல்லாம் எனது முடிவை சரியானதும் காலத்துக்கு உகந்தது என்றும் ஏற்றுக்கொண்டுள்ளன.

### நாமே தீர்த்திருந்தால் இந்நிலை வராது

''அமைதிப்படை வீரர்கள் ஆயிரக்கணக்காஞேர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். இரு தரப்பினருக்கும் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. நமது பிரச்னைகளை நாமே தீர்த்துக்கொள்ளத் தவறியமையால்தான் இந்த அவலநிலை ஏற்பட்டது. நமது பிரச்னைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. தன்னுதிக்கமுள்ள நமது நாட்டுக்கு வெளிநாட்டுப்படை வந்திறங்கியமையால் நமது இறைமைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதை கண்ணுல் காணும் துர்ப்பாக்கியநிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே நமக்குள்ளே அரசில் வேறுபாடுகள் இப்பினும் அவற்றை மறந்துவிட்டு இந்திய அமைதிப்படையை அனுப்புவது அத்தியாவசியம் எனக் கூறுகிறேன். அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல பல்வேறு மத-இன நிறுவனங்களும் அமைதிப் படையை அனுப்புவதை ஆதரித்து அறிக்கைகள் விடுத்துள்ளன. தற்போது இந்தியாவிலுள்ள பிரதான எதிர்க்கட்சிகளும் அமைதிப்படையை விலக்கிக் கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுள்ளன. அமைதிப் படையை விலக்கிக்கொள்வதற்கு ஒரேயொரு நிபந்தனை தான் நிறைவேற்றப்பட இருந்தது. அமைதிப்படையை வரவழைப்பதும் திருப்பி அனுப்புவதும் இலங்கை ஜனுதிபதியின் விருப்பத்தினைப்பொறுத்த விடயம். இதுவே அந்நிபந்தனையாகும். அந்த நிபந்தனை இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

### அந்நியப்படையை அனுமதிக்க முடியாது

''நான் இந்திய அமைதி காக்கும் படையை வாபஸ் பெறுமாறு இந்தியாவை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதாவது ஜூலை மாத இறுதிக்குள் அப்படையை வாபஸ் பெறுமாறு கேட்டுள்ளேன். ஜூலை மாத இறுதிக்குள் வாபஸ் பெற்றுக்கொண்டால் இவ்வாண்டில் நடக்கவிருக்கும் 'சார்க்' உச்சிமாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வது சுலபமாக இருக்கும். தென்னுசியப் பிராந்தியத்திலுள்ள தன்னுதிக்கமுள்ள நாடுகளின் கழகத்தால் நடத்தப்படும் இந்த மாநாடு கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற இருந்தது. ஆயினும் அன்று நமது நாட்டில் நிலவிய சூழல் காரணமாக அந்த மாநாட்டை இவ்வாண்டு நடத்துமாறு நாம் கேட்டிருந்தோம். அத்தகைய மாநாடு நடைபெறும்போது சுதந்திர நாடொன்றில் அந்நியப்படை இருப்பதை அனுமதிக்க முடியாது.

''இந்தியப் படையினர் இந்த நாட்டில் இருக்கவேண்டுமென்று கூறுபவர்களும் நம் மத்தியில் இருக்கிருர்கள். எனவே நாம் பொறுமையுடனும் நிதானத்துடனும்நடந்து அமைதியைப் பேணவேண்டும். வேலைநிறுத்தங்களும் வன்முறைகளும் அமைதியின்மையும் தோன்றினுல் அமைதிப் படையைத் திருப்பிஅனுப்பும் நிலை பாதிக்கப்படும். அந்தப் படையை இந்தியாவுக்கு அனுப்பும் நாள் எந்தநாளோ என்று நாம் பரிதவிக்கவேண்டி வரும். நாம் அனைவரும் இந்தக் காலகட்டத்தில் நமது கருத்துவேறுபாடுகளை மறந்து நாம் எல்லோரும் அவாவி நிற்கும், இந்தியப் படையை அனுப்புவதான நமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஒன்றுபடுவோமாக. எல்லோரையும் இணைந்து செயற்படுமாறு நான் வேண்டுகிறேன்.''

## இந்திய நிலைப்பாடு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக இலங்கை ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவிடமிருந்து நேற்று முன்தினமே தமக்கு கடிதம் ஒன்று கிடைத்ததாகவும் பிரதமர் காந்தி தெரிவித்தார்.

கல்கத்தா விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் பிரதமர் இத்தகவல்களை வெளியிட்டார்.

''அமைதிப்படையை விலக்கிக் கொள்வது தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சில கடமைகள் இருக்கின்றன. அவை முதலில் நிறைவேற்றப்படவேண்டும்'' என்றும் வலியுறுத்திய பிரதமர் காந்தி; அமைதிப்படையை விலக்கிக்கொள்ள இந்தியா தயக்கம் காட்டுவதாக வெளிவந்த செய்திகளையும் மறுத்தார்.

## வட-கிழக்கில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி

தரர்களை வேண்டிக்கொள்கிறேன்.

''கிண்ணியா, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற கலவரத்திற்கும் தமிழ் அமைப்புக்களுக்கும் எவ்வித தொடர்புகளுமில்லை. இதற்குப் பின்னணியில் ஸ்ரீலங்கா அரசு இருந்திருக்கிறதென்பது விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது''.

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசரெத்தினம்



புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருவாளர் பொன்னையா இராசரெத்தினம் (இராசு) 15-6-89 வியாழக்கிழமை காலமாஞர். அன்னுர் பொன்னையா, மருதநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், இரஞ்சித பூஷணி, பரமேஸ்வரன், மகேஸ்வரன், நடேஸ்வரன் (சோபிகா மினிபஸ் உரிமையாளர்), கனகலிங்கம் (மேற்கு ஜேர்மனி), சரோஜினிதேவி, ஸ்ரீகுமார் (பிரான்ஸ்), இராசலிங்கம் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரி, செல்வரஞ்சிதம், விஜயலெட்சுமி, இராசலெட்சுமி, சிவபாலரெத்தினம் (ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமனுரும், மதிவதனி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), பாஸ்கரன், மதியழகன், ஜெயவதனி, பாலச்சந்திரன், பாலேந்திரன், பாலேஸ்வரன், பரனேஸ்வரன், தர்ஷினி, சுபாஷினி, விஜீதா, சுமிதா, விஜிதரன், விக்னராஜ், சோபிகா, விமலராஜ், வியேந்திரன், தமிழ்ச்செல்வி, வாசுகி, ஸ்ரீ கிருஷ்ணன் ஆகியோரின் பாட்டனுரும், அமிர்தம், சிவக்கொழுந்து, நல்லம்மா (லண்டன்), இராசலெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, லண்டன்), காலஞ்சென்றவர்களான இராசையா (ஆசிரியர்), தம்பிஐயா, சபாரெத்தினம், தம்பித்துரை, ஆச்சிமுத்து, சின்னம்மா (ஆசிரியை), தையல்முத்து ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரிகைகள் 17-6-89 இன்று சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேம்.

[சி 2817] தகவல்: இராசலிங்கம் (கண்ணன்)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org